# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00
மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தன்னம்பிக்கைத் தமிழ் |
| பொருள் | : | தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனை தொடர்பான கட்டுரைகள். |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்.ச.மகாதேவன்<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| இணைப்பதிப்பாசிரியர்கள் | : | திரு.அ.மு.அயூப்கான்<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>முனைவர் அ.சே.சேக்சிந்தா<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>திரு.ஜெ.குமார்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| பதிப்பு | : | செப்டம்பர் 2016 |
| உரிமை | : | தமிழ்த்துறை,<br>சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) |
| ISBN | : | 938597756-3 |
| மொழி | : | தமிழ் |
| தாள், அளவு | : | காப்பியர், |
| பக்கங்கள் | : | 109 |
| விலை | : | ரூ.170/– |
| வெளியீடு | : | ஷான்லக்ஸ் பதிப்பகம்<br>61/66, வி.பி.காம்ப்ளக்ஸ், டி.பி.கே.மெயின் ரோடு<br>மதுரை |
| கணினி அச்சாக்கம் | : | கா.மானேந்தியப்பன்<br>காசி கணினிக் கலையகம்<br>41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை<br>கைபேசி : 9443614556 |

# திருக்குறளில் தன்னம்பிக்கை வளர்க்கும் வழிமுறைகள்

**ஆ.மெர்சி ஆநந்சலா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி, மதுரை

## முன்னுரை

உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு ஈடான இலக்கியம் உலகெங்கும் இல்லை. மனித குலம் அனைத்தையும் கவர்ந்து உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருப்பது குறளாகும். மனிதன் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைத் தெளிவுற விளக்கிச் சொல்கிறது. ஆராயுந்தோறும் புதுவிதமான கருத்துக்கள் தோன்றி இருப்பதே குறளின் சிறப்பாகும். தீயசக்திகளை அகற்றினால் இன்பமளிப்பதாக வாழ இயலும். தன்னம்பிக்கையை வளர்ப்பதற்குத் தடைகளாக வள்ளுவர் குறிப்பிடுபவற்றை ஆராய்ந்து வளப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சிந்தனைகள் குறித்து ஆராய்வதே தன்னம்பிக்கையோடு இக்கட்டுரையாகும்.

## குறள் கூறும் இன்பம்

நமக்குப் பழக்கமாகிவிட்ட ஒன்று நம்மை ஆட்டிப்படைக்கிறது. மனக்கட்டுப்பாடு இல்லாதவர்களைத் தீய பழக்கங்கள் வெகுவாகக் கவருகிறது. குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தனக்கு மட்டுமல்லாது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் துன்பமளிக்கின்ற செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தமது கவலைகளைப் போக்கி இன்பம் தருவது அது ஒன்றே என்று கருதி வாழ்கின்றனர். வாழ்க்கையின் நிரந்தர இன்பங்களைத் தொலைத்து விட்டோம் என்றும் நினைப்பதில்லை. நிரந்தர இன்பம் என்பது தானும் ஒழுக்கத்துடன் வாழ்ந்து பிறருக்கும் அறம் செய்து வாழ்தலாகும். இதனையே வள்ளுவர்,

> ***"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்***
> ***புறத்த புகழும் இல"***

என்கிறார்.

புகழைத் தராத சிற்றின்ப சேற்றிலே மூழ்குதல் கேட்டையே தரும். அறமல்லா வழியில் வரும் இன்பத்தைப் புறம் தள்ளாவிடின் பழி பாவங்கள் அவனை வந்தடையும்.

> ***"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்***
> ***வேறொன்றறியேன் பராபரமே"***

என்கிறார் தாயுமானவர். அனைத்து உயிர்களிடத்தும் அன்புடையோராய் வாழ வேண்டுமென்பதே பாரதியாரின் குறிக்கோளாகும். அறம் வழிப்பட்ட பொருள் தேடலும் அப்பொருளால் பெறும் இன்பமுமே நிரந்தரமானதாகும். அறத்தால் வருகின்ற இன்பம் தன்னம்பிக்கைச் சிந்தனையை வளர்க்கும் மேலும் மேலும் அறம் புரிவதற்குத் தூண்டுதலாகவும் அமையும்.

## ஊழை வெல்லும் திறன்

இறைவன் படைத்த உயிர்களனைத்தும் ஊழின் வலிமையாலே செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆற்றின் நீரோட்டம் போல ஊழின் வலியாலே வாழ்க்கை